# நமது தின கனி
காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 7 | 4 Pages | 7.8.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 7 | 4 பக்கங்கள் | 7.8.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பெண்ணின் தலையில் இருந்த பேன்கள்... கூச்சலிட்ட பயணிகள்... அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்



அமெரிக்கா, ஆக. 7


லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து நியூயார்க் நோக்கி சென்று கொண்டிருந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணித்த பெண்ணின் தலையில் பேன்கள் இருப்பதாக சக பயணிகள் கூச்சலிட்டதால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 15ம் தேதி இச்சம்பவம் நடந்துள்ளது. ஆனால் மருத்துவ காரணங்களுக்காக விமானம் தரையிறக்கப்பட்டதாக அந்நிறுவனம் அப்போது தெரிவித்திருந்தது.

இந்நிலையில், விமான நிறுவனம் கூறிய காரணம் உண்மையில்லை என விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் டிக்டாக்கில் வீடியோ வெளியிட்டுள்ளார். அந்த வீடியோ 1 மில்லியன் பார்வைகளை கடந்துள்ளது.

இந்த பேன் பிரச்னைக்கு பிறகு அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம் 12 மணி நேரம் கழித்து மீண்டும் இயக்கப்பட்டுள்ளது.

## ஷேக் ஹசீனா மாளிகையில் உள்ள பொருட்களை அள்ளிச்சென்ற போராட்டக்காரர்கள்



வங்காளதேசம், ஆக. 7

ஷேக் ஹசீனா அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். கடந்த இரண்டு நாட்களாக போராட்டத்தை அடக்க முடியவில்லை. அவர்கள் இன்று ஷேக் ஹசீனாவின் மாளிகைக்குள் புகுந்தனர். இதற்கு முன்னதாக ஷேக் ஹசீனா டாக்காவில் இருந்து வெளியேறி இந்தியா வந்தடைந்தார்.

ஷேக் ஹசீனா மாளிக்கைக்குள் சென்ற போராட்டக்காரர்கள் தற்காலிக கூடாரத்திற்கு தீ வைத்தனர். மாளிகையில் உள்ள சமையல் அறைக்கு சென்று சமைத்து வைத்த உணவுகளை ருசி பார்த்தனர். அங்கிருந்து படுக்கையில் படுத்து போட்டோ எடுத்துக் கொண்டனர். சிலர் ஷேக் ஹசீனா வரைந்து வைத்திருந்த போட்டோக்கள், அவருடைய சேலைகள் கண்ணில் பட்டதையெல்லாம் கொள்ளைடியத்தனர்.

பெரும்பாலான போராட்டக்காரர்கள் மாளிகை வளாகத்தில் வளர்க்கப்பட்ட வாத்து, முயல், கோழி போன்றவற்றை பிடித்துச் சென்றனர்.

இதற்கிடையே வங்காளதேச சுதந்திரத்திற்கு முக்கிய காரணமாக இருந்த ஷேக்ஹசீனாவின்தந்தைமுஜிபுர்ரஹ்மான்சிலையைபோராட்டக்காரர்கள் உடைத்தனர்.

## போராட்டம் எதிரொலி: வங்காளதேசத்தில் அலுவலகத்தை மூடியது எல்.ஐ.சி.




டாக்கா, ஆக. 7

வங்காளதேசத்தில் அரசுக்கு எதிரான வன்முறைப் போராட்டம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், எதிர்க்கட்சியினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் நீடிக்கிறது. இந்த வன்முறை மற்றும் மோதல்களில் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே, பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகியதுடன் நாட்டை விட்டுவெளியேறினார்.அவர்ராணுவஹெலிகாப்டர்மூலம்இந்தியாவுக்கு வந்துள்ளார்.அங்கிருந்துலண்டன்செல்லஉள்ளதாகதகவல்வெளியானது. அங்கு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், வங்காளதேசத்தில் போராட்டம் தொடர்ந்து நடந்து வருவதாலும், சமூகஅரசியல் பதற்றம் அதிகரித்திருப்பதாலும் டாக்காவில் செயல்பட்டு வந்த எல்.ஐ.சி. அலுவலகம் இன்று மூடப்பட்டது.

ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதால் வரும் 7ம் தேதி வரை எல்.ஐ.சி. அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என எல்.ஐ.சி. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டம் காரணமாக இந்தியாவங்காளதேச எல்லை முழுவதும் இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஆய்வு

சென்னை, ஆக. 7

சென்னை கொளத்தூர் தொகுதி வீனஸ்நகர்பகுதியில்முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பல் வேறு திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டு வருகிறார். கொளத்தூரில் துணை மின் நிலையம், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் நிலையத்தை முதல் அமைச்சர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதேபோல, ஜி.கே.எம். காலனியில் தொடக்கப்பள்ளி அடிக்கல் நாட்டு விழா மற்றும் 10 உயர் கோபுர மின் விளக்குகளை தொடங்கி வைக்கிறார். மேலும், கொளத்தூர் நேர்மை நகரில் கட்டப்படும் வணிக வளாகத்தை முதல்அமைச்சர் பார்வையிடுகிறார்.

கொளத்தூர் தணிகாசலம் கால்வாய் புனரமைப்பு பணிகளையும் முதல் அமைச்சர் பார்வையிடுகிறார். அப்போது முதல்அமைச்சருடன் அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



## கோவை மாநகராட்சி மேயராக ரங்கநாயகி போட்டியின்றி தேர்வு



கோவை, ஆக. 7

கோவை மாநகராட்சியில் மொத்தம் 100 வார்டுகள் உள்ளன. இந்த மாநகராட்சிக்கு கடந்த 2022ம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. இதில் தி.மு.க. கூட்டணி 96 இடங்களில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. 3 இடங்களிலும், 1 இடத்தில் சுயேச்சை வேட்பாளரும் வெற்றி பெற்றனர்.

இதனைத்தொடர்ந்து 19வார்டு தி.மு.க. கவுன்சிலரான கல்பனா ஆனந்தகுமார் மேயராக தேர்வு செய்யப்பட்டார். ஆனால் அவருக்கு கவுன்சிலர் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது. இந்த நிலையில் கல்பனா உடல்நிலை காரணமாக திடீரென தனது மேயர்பதவியை கடந்த மாதம் ராஜினாமா செய்தார்.

இதனால் மாநகராட்சிக்கு புதிய மேயர் தேர்வு செய்யும் தேர்தல் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் அதிகாரியாக மாநகராட்சி ஆணையாளர் சிவ குருபிரபாகரன் நியமிக்கப்பட்டார். மேயர்பதவியை கைப்பற்ற தி.மு.க. பெண் கவுன்சிலர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவி வந்தது.

இந்நிலையில் மேயர் தேர்வு தொடர்பாக தி.மு.க. கவுன்சிலர்கள் கூட்டம் காளப்பட்டியில் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, சு.முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். கவுன்சிலர்கள் கூட்டம் தொடங்கியதும் அமைச்சர் கே.என்.நேரு, தான் கொண்டு வந்திருந்த கடிதத்தை எடுத்து நிர்வாகிகள் முன்னிலையில் படித்தார்.

இதில் கோவை மாநகராட்சி மேயர் வேட்பாளராக 29வது வார்டு தி.மு.க. கவுன்சிலர் ரங்கநாயகியை முதல்அமைச்சர் அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

இந்நிலையில் இன்று நடைபெற்ற கோவை மேயர் தேர்தலில் ரங்கநாயகி போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். ரங்கநாயகி தவிர வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யாததால் போட்டியின்றி அவர் தேர்வானார்.

இதன்படி கோவை மாநகராட்சி 29வது வார்டு கவுன்சிலரான ரங்கநாயகி மேயராக தேர்வு செய்யப்பட்டார். கோவை மேயரை தேர்வு செய்ய மறைமுகத்தேர்தல் இன்று நடக்க இருந்தநிலையில் ஒருமனதாக அவர் தேர்வானது குறிப்பிடத்தக்கது.

## அறந்தாங்கி அருகே கோவிலின் இசை பாடல் வெளியீட்டு விழா




அறந்தாங்கி ஆக 7

அறந்தாங்கி அருகே ஒப்பில்லா மணி அம்பாள் உடனுறை ஸ்ரீமெய் நின்ற நாத சுவாமி கோவில் பாடல் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு வெளியிட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அடுத்த கீரமங்கலம் தனியார் மண்டபத்தில் அப்துல் கலாம் வளர்ச்சி மற்றும் சேவை நிறுவனம் சார்பாக ஒப்பில்லா மணி அம்பாள் உடனுறை ஸ்ரீமெய் நின்ற நாத சுவாமி கோவில் பாடல் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்த பாடல் இசை வெளியீட்டை தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியை அப்துல் கலாம் வளர்ச்சி மற்றும் சேவை நிறுவனம் தலைமை முனைவர் தமிழ் தாசன் ஞான.தனசேகரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. சிவன் கோவில் குருக்கள் சிவசிதம்பரம் வரவேற்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் சிவகுமார் மற்றும் குலமங்கலம் தெற்கு பஞ்சாயத்து தலைவர்ரஞ்சித்கு மார் மற்றும் அப்துல் கலாம் வளர்ச்சி மற்றும் சேவை ஒருங்கிணைப்பாளர் கண்ணன் பரமாத்மா, சுதாராஜன், ஆனந்தி, மாரிமுத்து, குமார், மணி வண்ணன், விஜயகுமார், லலிதாகுமாரி, சியாமளா, ஹரிப்பிரியா, சதீஷ்குமார், பொன்னுச்சாமி, பரிமளா ஆகியோர் கலந்து கொண்டனர். சங்கீதா ராமதாஸ் நன்றியுரை கூறினார்

## பருத்தி மகசூலை கொள்முதல் செய்ய வேண்டும் தமிழக அரசுக்கு பிரேமலதா வலியுறுத்தல்

சென்னை, ஆக. 7

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஜூன் 14ந்தேதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் திறந்து விடப்பட வேண்டிய தண்ணீரை வழக்கத்திற்கு மாறாக தமிழக அரசு

இந்த ஆண்டு மிகவும் காலதாமதமாக திறந்த காரணத்தினால், அந்த தண்ணீரானது டெல்டா விவசாயிகளுக்கு எந்த பலனையும் அளிக்கவில்லை.

குறுவை சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை தந்துள்ளது.



மேலும் எதிர்வரும் சம்பா சாகுபடிக்கு தேவையான விதைநெல், உரம், பூச்சி மருந்து போன்றவைகள் விவசாயிகளுக்கு போதிய அளவு தட்டுப்பாடின்றி கிடைத்திட தமிழக அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல வறட்சி காலப்பயிரான பருத்தி விவசாயிகளின் முதல் தவணை மகசூல் முழுவதும் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில் 2ம் தவணை மகசூல் முழுவதும் சரியான விலை நிர்ணயம் இல்லாததால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். தனியார் கொள்முதல் நிறுவனங்கள் அனைவரும் கூட்டாக முடிவு எடுத்து குறைந்த விலை நிர்ணயம் செய்த காரணத்தினால் விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ளனர். ஆகவே 2ம் மகசூலையாவது தமிழக அரசே நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும்.

முதலமைச்சர் டெல்டா விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# வாழப்பாடியில் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி




வாழப்பாடி, ஆக. 7

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித்தமிழர் அவர்களின் உடன்பிறந்த அக்கா பானுமதி அவர்களின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி சேலம் வடக்கு மாவட்ட செயலாளர் அக்கா திருமதி இரா தெய்வானை அவர்கள் வழிகாட்டுதலின்படி வாழப்பாடி பேருந்து நிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக நினைவஞ்சலி அனுசரிக்கப்பட்டது வாழப்பாடி ஒன்றிய செயலாளர் அ. முல்லைவாணன் தலைமையிலும் பேரூர்செயலாளர் ம.பிரபாகரன் முன்னிலையிலும் நினைவஞ்சலி அனுசரிக்கப்பட்டது. வாழப்பாடி பேரூராட்சியில் ம. பிரபாகரன் ஒருங்கிணைப்பில் 20கும் மேற்ப்பட்டோர் புதிதாக தன்னை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் ஒன்றிய செயலாளர் அ. முல்லைவாணன் தலைமையில் இணைத்து கொண்டனர் நிகழ்வில்கலந்துகொண்ட நிர்வாகிகள் வி. சி. கண்ணன் மாவட்ட அமைப்பாளர். ச. ராஜசேகர் மாவட்ட துணை அமைப்பாளர். ஆட்டோசுரேஷ். ஜெயசீலன். வீரா. கதிர்வேல். மனோஜ் குமார். விஜய். சரவணன். பாலகிருஷ்ணன். விக்கி. கௌதம். சுபாஷ். ரமேஷ். பார்த்திபன். சூர்யா. பூவரசன். தினேஷ். சதீஷ். மற்றும் பலர் கலந்து கொண்ட நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

# 6 மாதம் சம்பள பாக்கி: கலெக்டர் அலுவலகத்தில் மண்எண்ணை கேனுடன் வந்த தூய்மை பணியாளர்



நெல்லை, ஆக. 7

நெல்லை மாவட்டம் மானூர் யூனியனுக்கு உட்பட்ட சேதுராயன் புதூர் பஞ்சாயத்து தெற்கு தெருவை சேர்ந்தவர் பிச்சம்மாள் (வயது 55).

இவர் இன்று காலை நெல்லை கலெக்டர் அலுவலகத்திற்கு மனு அளிக்க வந்திருந்தார். அப்போது அவர் கையில் ஒரு கேனில் மண்எண்ணை மறைத்து வைத்து கொண்டு வந்தார்.

இதனை அங்கு பாதுகாப்புபணியில்நின்றிருந்த போலீசார்பார்த்து அவரிடமிருந்து பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அவரிடம் மேலப்பாளையம் குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரியப்பன் விசாரித்தார். அப்போது அவரது கையில் இருந்த மனுவை வாங்கி படித்தார்.

நான் மானூர் யூனியனுக்கு உட்பட்ட சேதுராயன்புதூர் ஊராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றி வருகிறேன். சுமார் 6 ஆண்டுகளுக்கு மேலாக பணி செய்து வரும் நிலையில் கடந்த 6 மாதமாக எனக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக நான் கேட்கும் போது என்னை சிலர் மிரட்டுகின்றனர். இதனால் நான் மானூர் வட்டார வளர்ச்சி அதிகாரிகளிடம் புகார் அளித்து உள்ளேன். அவர்களும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது எனக்கு பதிலாக 2வது வார்டு உறுப்பினரை தூய்மை காவலராக நியமித்து விட்டதாக கூறுகிறார்கள்.

எனவே இது தொடர்பாக விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

# சத்யராஜ் போல் முதலமைச்சரின் கேரக்டரை புரிந்து கொள்ள முடியாது: தி.மு.க. எம்.எல்.ஏ.பேச்சால் சிரிப்பலை






புதுச்சேரி, ஆக. 7

புதுவை முதலமைச்சருக்கு எதிராக செயல்பட்ட பா.ஜனதா அதிருப்திஎம்.எல்.ஏ.க்கள் அடிக்கடி டெல்லி சென்று வந்தனர்.

அவர்கள் சட்டமன்றத்தில் பெருமளவில் பிரச்சினை எழுப்புவார்கள் எனஎதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. சட்டமன்றம் நடைபெறும் நேரத்தில் பா.ஜனதாவின் எம்.எல்.ஏ.க்கள் ஜான்குமார், ரிச்சர்ட் மற்றும் பா.ஜனதா ஆதரவு சுயேட்சை எம்.எல்.ஏ. சிவசங்கரன் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ளனர்.

இவர்களில்பிரதானமாக செயல்பட்ட பா.ஜனதா எம்.எல்.ஏ. கல்யாண சுந்தரம் வெளிநாடு செல்லவில்லை.

இந்தவிவகாரம்புதுவை சட்டமன்றத்தில் இன்று பேசப்பட்டது. தி.மு.க. எம்.எல்.ஏ.செந்தில்குமார், அனைவரையும் அனுப்பி வைத்துவிட்டு கல்யாண சுந்தரம் தங்கி விட்டார். அவர்கள் சொந்தகாசில் சூனியம் வைத்துள்ளனர் என்றார்.

அப்போது கல்யாண சுந்தரம், எனக்கு பாஸ்போர்ட் வரவில்லை, அதனால் செல்லவில்லை. சட்டமன்றத்துக்கு உள்ளே வரும்போது முதலமைச்சர் என்னைப் பார்த்து ஏன்பா நீ வெளிநாடு போகலையா? என்று கேட்டார்.

அவர் எதற்காக கேட்டார் என எனக்கு புரியவில்லை என்றார்.

இதற்கு தி.மு.க. எம்.எல்.ஏ. நாஜிம், அவர் நடிகர் சத்யராஜ் மாதிரி, அவர் கேரக்டரையே புரிஞ்சிக்க முடியாது என குறிப்பிட சபையில் சிரிப்பலை எழுந்தது.

# திருக்கோவிலூர் அருகே தனியார் கல்லூரி பஸ் கவிழ்ந்து விபத்து: 5 மாணவர்கள் படுகாயம்

திருக்கோவிலூர், ஆக.7

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே எறையூரில் தனியார் கலை அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களை ஏற்றி வர கல்லூரி நிர்வாகம் சார்பில் பஸ்கள் இயக்கப்படுகிறது.

அதன்படி இக்கல்லூரிக்கு சொந்தமான பஸ், எம்.தாங்கலில் இருந்து 10க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளை ஏற்றிக் கொண்டு இன்று காலை கல்லூரிக்கு புறப்பட்டது. இந்த பஸ் அதே ஊரில் உள்ள வளைவில் திரும்பியபோது, திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதில் சாலையோர பள்ளத்தில் பக்கவாட்டில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. மாணவர்களின் அலறல் சத்தம் கேட்டு அவ்வழியே சென்றவர்கள் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் 3 மாணவர்கள், 2 மாணவிகள் படுகாயமடைந்தனர். உடனடியாக 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு காயமடைந்த மாணவர்களை கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், விபத்துகுறித்து திருக்கோவிலூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் திடீர் பரபரப்பை உருவாக்கியது.

# கூகுள்பே, கியூஆர் கோடு பயன்படுத்தி மோசடி: போலீஸ் எச்சரிக்கை




சென்னை, ஆக. 7

பொதுமக்களின் வங்கிக் கணக்கில் இருந்து ஆன்லைன்மூலமாக பல்வேறு வழிகளில் பணம் திருடப்பட்டு வருகிறது.

கூரியர் தபாலில் உங்கள் பெயரில் போதை பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது. நாங்கள் சொல்கிறபடி கேட்காவிட்டால் உங்களை கைது செய்து சிறையில் அடைத்து விடுவோம் என்று மிரட்டி ஐ.டி. ஊழியர்களிடம் லட்சக்கணக்கில் பணம் பறிப்பது தொடர்ந்து வருகிறது.

அதே நேரத்தில் உங்கள் ஏ.டி.எம். கார்டு காலாவதியாகப் போகிறது, மின் இணைப்பைதுண்டிக்கப் போகிறோம் என்பது போன்ற பொய்களை அள்ளி வீசியும் ஆன்லைன் மோசடி பேர்வழிகள் பொது மக்களின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் சுருட்டுகிறார்கள்.

இந்த நிலையில் கூகுள்பே, கியூஆர்கோடு மூலமாக புதிய மோசடி அரங்கேற்றப்படுவது தற்போது தெரிய வந்துள்ளது. ஆன்லைன் மூலமாக நடைபெறும் வியாபாரம் மூலமாகவும் உங்கள் வங்கி கணக்கில் தெரியாமல் பணம் அனுப்பி விட்டேன். அந்த பணத்தை எனக்கு திருப்பி அனுப்புங்கள் எனக் கூறி கியூஆர் கோடை அனுப்பியும் மோசடி நடைபெறுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்படி ஆன்லைனில் அனுப்பப்படும் கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்து பணத்தை அனுப்பினால் மர்ம நபர்கள் சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்கை ஹேக் செய்து அதில் உள்ள பணத்தை சுருட்டி விடுவதாக போலீசார் எச்சரித்து உள்ளனர். இது தொடர்பாக சைபர் கிரைம் போலீஸ் அதிகாரி ஒருவர் கூறும் போது, ஆன்லைன் மோசடியில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் அறிமுகம் இல்லாத நபர்களின் தேவையில்லாத அழைப்புகளை உடனடியாக துண்டித்து விட வேண்டும். தொடர்ந்து நீங்கள் பேசினால் உங்களை பயன்படுத்தி நிச்சயம் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை சுருட்டி விடுவார்கள் என்றார்.

# 16 ஆண்டுகளாக நீடிக்கும் சடையங்குப்பம் மேம்பாலப்பணி 90 சதவீதம் முடிந்தது



திருவொற்றியூர், ஆக. 7

மணலி அருகே உள்ள சடையங்குப்பம் பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியின் வடக்கே கொசஸ்தலை ஆற்றின் உபரிக்கால்வாய், தெற்கே புழல் உபரி கால்வாய், கிழக்கே பக்கிங்காம் கால்வாய், ஊருக்குள் சடையங்குப்பம் ஏரி என சுற்றியும் நீர் நிலைகள் சூழ்ந்துள்ளது.

பருவமழையின் போது புழல் ஏரியில் இருந்து உபரிநீர் திறக்கப்படும் போது அந்த தண்ணீர் கால்வாய் வழியாக ஆமுல்லை வாயல், கொசப்பூர் சடையங்குப்பம் ஆகிய பகுதிகளை கடந்து எண்ணூரில் உள்ள முகத்து வார ஆற்றில் கலக்கும்.

இவ்வாறு கால்வாய் வழியாக பெருக்கெடுத்து வரும் உபரிநீர் சடையங்குப்பம் பகுதிகளில் உள்ள பர்மாநகர், இருளர்காலனி போன்ற பகுதிகளில் குடியிருப்புகளை சூழ்ந்துவிடும். இதனால் அங்குள்ள மக்கள் வெளியே வர முடியாமல் தவிப்பது தொடர்ந்து நீடித்து வந்தது.

இதைத்தொடர்ந்து மழைக்காலத்தில் சடையங்குப்பம் பகுதியில் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்க கடந்த 2008ம் ஆண்டு மறைந்த கே.பி.பி.சாமி அமைச்சராக இருந்த போது பர்மா நகர், இருளர் காலனி அருகே அன்றைய திட்ட மதிப்பீட்டின் படி ரூ.19 கோடி செலவில் கால்வாய் மேம்பாலம் கட்ட நெடுஞ்சாலைத் துறை திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டது.

ஆனால் இந்த பணி பல்வேறு காரணங்களால் நத்தை வேகத்தில் நடைபெற்றதால் பர்மா நகர் இருளர் காலனியில் வசிக்கும் மாணவ, மாணவிகள், தொழிலாளர்கள், முதியவர்கள் ஆகியோர் பாலத்தை கடந்து செல்ல சிரமப்பட்டு வந்தனர். கடந்த 2015ம் ஆண்டு பெரு வெள்ளத்திற்கு பின்னர் இந்த மேம்பாலப் பணி வேகம் எடுத்தது.

இதைத்தொடர்ந்து 16 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற மேம்பாலம் பணி தற்போது 90 சதவீதம் முடிந்து உள்ளது.

ஆனால் மேம்பாலத்தில் தெரு விளக்குகள் உள்ளிட்ட இறுதி கட்ட பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. இருப்பினும் வாகன ஓட்டிகள் இந்த பாலம் வழியாக செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கிடையே மேம்பாலம் வழியாக இரவு நேரத்தில் வரும் வாகன ஓட்டிகள்கடும்சிரமம்அடைந்து வருகின்றனர். மின்விளக்கு இல்லாததால் இருட்டான இந்த பகுதியை நோட்டமிட்டு வழிப்பறி, கொள்ளை சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகிறது.

எனவே மேம்பாலத்தில் உடனடியாக தெருவிளக்குகள் பொருத்தி மேம்பாலத்தை முறையாக திறக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# ராட்சத அலையில் சிக்கி வள்ளம் கவிழ்ந்தது 6 மீனவர்கள் தத்தளிப்பு



கன்னியாகுமரி, ஆக. 7

கன்னியாகுமரி அருகே உள்ள கோவளம் ஜார்ஜியார் குருசடி தெருவை சேர்ந்தவர் ரஸ்டன் (வயது 50) மீனவர். இவருக்கு சொந்தமான வள்ளத்தில் இவரும், மற்ற 5 பேரும் இன்று அதிகாலை கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் நடுக்கடலில் வலை விரித்து நெத்திலி மற்றும் சாளை போன்ற மீன்களைபிடித்து விட்டு இன்று காலை 7.30 மணிக்கு கரை திரும்பி கொண்டிருந்தனர். அப்போது கடல் சீற்றத்தினால் எழுந்த ராட்சத அலையில் சிக்கி இவர்களது வள்ளம் கவிழ்ந்தது.

இதில் வள்ளத்தில் இருந்து 6 மீனவர்களும் கடலில்தவறி விழுந்தனர். அவர்கள் 6 பேரும் கடலில் தத்தளித்து கொண்டிருந்தனர். இதை பார்த்த கரையில் மீன் இறக்கி கொண்டிருந்த மீனவர்கள் கடலில் குதித்து நீந்தி சென்றனர். பின்னர் அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் கடலில்தத்தளித்து கொண்டிருந்த அந்த 6 மீனவர்களையும் பத்திரமாக உயிருடன் மீட்டனர்.

அதன்பிறகு கடலில் கவிழ்ந்து கிடந்த அந்த வள்ளத்தையும் அவர்கள் மீட்டனர். அதன் பிறகு அந்த 6 மீனவர்களையும் அந்த வள்ளத்தில் ஏற்றி பத்திரமாக கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். ஆனால் வள்ளம் கடலில் கவிழ்ந்ததில் என்ஜின் சேதம் அடைந்தது.

இதேபோல கடந்த வாரம் கோவளத்தில் நடுக்கடலில் ஒரு வள்ளம் கவிழ்ந்து 5 மீனவர்கள் உயிருக்கு போராடியபடி தத்தளித்ததும் அவர்களை கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மற்ற மீனவர்கள் உயிருடன் மீட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இப்போது கோவளத்தில் 2வது முறையாக ராட்சத அலையில் சிக்கி வள்ளம் கவிழ்ந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாமல்லபுரம் வந்த மெக்சிகோ கவர்னர்: பல்லவர் கால வரலாற்றை கேட்டு வியந்தார்



மாமல்லபுரம், ஆக. 7

அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாகாணத்தின் கவர்னரான மிசெல்லே லுஜன் கிரிஷாம், அந்நாட்டு அரசு உயரதிகாரிகள் குழுவினருடன், உயர் கல்வி, வர்த்தகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைக்காக இந்தியா வந்துள்ளார்.

இந்த நிலையில், அரசுத்துறை குழுவினர் மற்றும் அவரது கணவர் ஆகியோருடன் மாமல்லபுரம் வந்தார். அங்குள்ள கடற்கரை கோவிலை கண்டு ரசித்தார்.

பல்லவர்கள், சைவ, வைணவ வழிபாட்டிற்காக, இந்த கோயிலை உருவாக்கியதும், இதுதவிர 6 கோவில்கள் கடலில் மூழ்கியது. பல்லவர்களின் துறைமுகமாக விளங்கியது, பழங்காலத்தில் பக்தர்கள் வழிபட்டு வந்த இந்த கோயில் தற்போது பாரம்பரிய நினைவுச் சின்னமாக தொல்லியல்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருவது உள்ளிட்ட பல்லவர் காலத்து வரலாற்று தகவல்களை, சுற்றுலாத்துறை அங்கிகாரம் பெற்ற வழிகாட்டி மதன் என்பவர் அவரிடம் விளக்கினார்.

அவற்றைக் கேட்டு வியந்த அவர் தன் மொபைல் போனில் கணவருடன் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டார். சுற்றுலாப் பயணிகள் சிலரும் அவருடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# வீட்டு வரைபட அனுமதி.. கட்டணம் உயர்த்தியதற்கு அண்ணாமலை கண்டனம்



சென்னை, ஆக. 7

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில்,

ஆட்சிக்கு வந்ததில் இருந்து, சொத்து வரி, பதிவுக்கட்டணம், கட்டுமான பொருள்கள் விலை என அனைத்தையும் உயர்த்தி, பொதுமக்களின் சொந்த வீடு கனவைத் தகர்த்த திமுக அரசு, தற்போது, வீட்டு வரைபட அனுமதிக் கட்டணத்தையும் இரண்டு மடங்குக்கும் மேல் உயர்த்தி அதிர்ச்சி அளித்திருக்கிறது. சென்னை உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் என அனைத்துப் பகுதிகளிலும், இந்த சுயசான்று அடிப்படையிலான வரைபட அனுமதிக் கட்டணம் இரண்டு மடங்குக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீட்டு வரைபட அனுமதி வழங்குவதை எளிதாக்குவோம் என்று வாக்குறுதி வழங்கிய திமுக, சென்னையில், 1,000 சதுர அடி இடத்துக்கு, அனுமதி வழங்க சுமார் ரூ.40,000 ஆகஇருந்தகட்டணத்தை, ரூ.1,00,000 ஆக ஆக்கியிருப்பதுதான் எளிமையாக்குவதா? ஏற்கனவே, குறித்த நேரத்தில், காலதாமதமின்றி வரைபட அனுமதி பெறப் பல தரப்பினருக்கும் கமிஷன் கொடுக்கும் நிலை இருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலையில், சுயசான்று அடிப்படை என்று கூறி லஞ்ச ஊழலை அதிகாரப்பூர்வமாக்கியிருக்கிறது திமுக என்பதுதான் உண்மை.

பொதுமக்கள்சுயசான்று அளித்து, வரைபட அனுமதி பெற, அதிகக் கட்டணம் செலுத்த வேண்டும் என்பது என்ன விதமான நடைமுறை? அதிகக் கட்டணம் செலுத்தினால், கட்டிட வரைபடம் சரிபார்த்தல், கட்டிடம் கட்டப்படும் இடத்தை நேரில் சென்று பார்வையிடல் உள்ளிட்டவற்றை மேற்கொள்ளாமல் உடனேயே அனுமதி வழங்குவோம் என்றோ அல்லது, குறைந்த கட்டணம் செலுத்தினால்,

அனுமதி வழங்கத் தாமதமாக்குவோம் என்றோ கூறுகிறதா திமுக அரசு? பொதுமக்கள் எதிர்பார்த்தது,

சிக்கலற்ற நடைமுறைகள் மூலம், காலதாமதமின்றி வரைபட அனுமதி வழங்குவதையே தவிர, இரண்டு மடங்கு அதிகக் கட்டணத்தை அல்ல. உடனடியாக, சுயசான்று அடிப்படையில் வரைபட அனுமதி வழங்குவதற்கான பகல் கொள்ளை கட்டண உயர்வைத் திரும்பப் பெற வேண்டும் என்றும், வழக்கமான கட்டணத்தையே சுயசான்று அடிப்படையிலான அனுமதிக்கும் வசூலிக்க வேண்டும் என்றும், திமுக அரசை வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வந்ததில் இருந்து, சொத்து வரி, பதிவுக்கட்டணம், கட்டுமான பொருள்கள் விலை என அனைத்தையும் உயர்த்தி, பொதுமக்களின் சொந்த வீடு கனவைத் தகர்த்த திமுக அரசு, தற்போது, வீட்டு வரைபட அனுமதிக் கட்டணத்தையும் இரண்டு மடங்குக்கும் மேல் உயர்த்தி அதிர்ச்சி அளித்திருக்கிறது.

# மண்டபம் சென்னை: 604 கி.மீ. கடலில் நீந்தி சிறப்பு குழந்தைகள் கின்னஸ் சாதனை படைக்க ஆர்வம்



ராமநாதபுரம், ஆக. 7

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் கடற்கரையில் இருந்து எஸ்.டி.ஏ.டி. அமைப்பின் சார்பில் 15 சிறப்பு குழந்தைகள் கின்னஸ் உலக சாதனைக்காக சென்னை மெரினா கடற்கரை வரை 604 கி.மீ நீந்தி செல்கின்றனர்.

இன்று (5ந்தேதி) தொடங்கி நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் (காலை 6 மணி முதல் மாலை 6 வரை) நீந்தி ஆகஸ்ட் 15 ந்தேதி சென்னையில் நிறைவு செய்ய உள்ளனர்.

இன்று காலை இதற்கான தொடக்க விழா மண்டபத்தில் நடந்தது. மண்டபம் பேரூராட்சி சேர்மன் ராஜா குடியரசைக்கு தொடங்கி வைத்தார். அதைத்தொடர்ந்து 15 சிறப்பு குழந்தைகளும் கடலில் இறங்கி நீந்த தொடங்கினர்.

இந்த நிகழ்வில் தமிழ் நாடு மீனவர் பேரவை தலைவர் சிராஜுதீன், குழந்தைகளின் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு மீனவர் சங்க தலைவர் அன்பழகனார் கூறுகையில், கின்னஸ் சாதனைக்காக 15 சிறப்பு குழந்தைகள் இதில் பங்கேற்கின்றனர். அவர்கள் ஏற்கனவே இந்தியாவின் பல மாநிலங்களில் நீந்தி சாதனை படைத்துள்ளனர்.

கடலில் நீந்தும் குழந்தைகளுக்காக 5 படகுகள் பாதுகாப்பாக செல்லும். அவர்களுடன் 8 பயிற்சியாளர்கள் செல்வார்கள். 11 நாட்கள் கடலில் நீந்தும் குழந்தைகள் வருகிற 15 ந்தேதி சென்னையில் நிறைவு செய்வார்கள் என்று கூறினார்.

# குமரியில் கடல் சீற்றம் கடலோர பகுதிகளில் போலீசார் தீவிர கண்காணிப்பு



கன்னியாகுமரி, ஆக. 7

தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை காரணமாக ஒரு சில மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகம் மற்றும் கேரளாவில் வருகிற 7ந்தேதி வரை கடல் சீற்றம் அதிகமாக இருக்கும் என்று தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து குமரி மாவட்ட நிர்வாகம் சார்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கலெக்டர் அழகுமீனா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், குமரி மாவட்டத்தில் வருகிற 7ந்தேதி வரைஅனைத்து கடற்கரை கிராமங்களிலும் கடல் வழக்கத்தை விட சீற்றமாக காணப்படும். காற்றின் வேகம் 35 முதல் 45 கிலோமீட்டர்வரையிலும் சில நேரங்களில் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இருக்கும் என தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரிக்கைவிடுத்துள்ளது. எனவே மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். கடற்கரை பகுதியில் சுற்றுலா பயணிகளும் செல்வதற்கு தடை விதிக்க ப்பட்டுள்ளது. கடற்கரையில் குளிக்கவோ, இறங்கவோ கூடாதுஎன்றுகூறியுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு குமரி மாவட்டத்தில் உள்ள மீனவ கிராமங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை உள்ள அனைத்து மீனவ கிராமங்களுக்கும் மீன்வளத்துறை அதிகாரிகள் மூலமாகவும், பங்கு தந்தைகள் மூலமாகவும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனால் கன்னியாகுமரிக்கு வந்த சுற்றுலா பயணிகள் நேற்று மாலை கடற்கரைக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது. கணபதிபுரம் லெமூர் கடற்கரையில் நேற்று மாலை சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் கடற்கரைக்கு வந்திருந்தார்கள்.


போலீசார் அங்கு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். கடற்கரை பகுதிக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. சுற்றுலா பயணிகள்அங்கிருந்துதிருப்பி அனுப்பினார்கள். முட்டம், தேங்காய்பட்டினம் உட்பட கடற்கரை பகுதிகளில் போலீசார் ரோந்து பணியை மேற்கொண்டனர். இன்று மாவட்டம் முழுவதும் கடல் சீற்றமாகவே இருந்தது. ராட்சத அலைகள் எழும்பியது.

கன்னியாகுமரி கடற்கரையில் வள்ளங்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை காணலாம்.

கடற்கரையையொட்டி உள்ளகடல்அரிப்புதடுப்பு சுவர்கள் மீது ராட்சத அலைகள் வேகமாக மோதியது. கடல் சீற்றமாக காணப்பட்ட தையடுத்து மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை.

ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை உள்ள கடற்கரை கிராமங்களில் வள்ளல்கள் கடற்கரை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. குளச்சல், சின்னமுட்டம் துறைமுகத்தில் இருந்து ஒரு சில விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். கடலோர காவல் படை போலீசாரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 55 ஆயிரம் கனஅடியாக சரிவு



ஒகேனக்கல், ஆக. 7

கர்நாடகா, கேரள மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. குறிப்பாக கேரளா மாநிலத்தின் வயநாடு பகுதியில் கனமழை பெய்து வருகிறது.

அதன் காரணமாக கர்நாடகா மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய இரு அணைகளில் இருந்தும் உபரி நீரானது 38,315 கன அடி உபரி நீர் வெளியேற்றப் பட்டது

இதனால் தருமபுரி மாவட்ட ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைய தொடங்கியது. இந்த நிலையில் நேற்று ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 75 ஆயிரம் கன அடியாக அதிகரித்து இருந்த நிலையில், கர்நாடகா அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டது. இதன் காரணமாக நீர்வரத்து இன்று காலை 6 மணி நிலவரப்படி 60ஆயிரம் கன அடியாக குறைந்தது. அதனைத் தொடர்ந்து இன்று காலை7மணிநிலவரப்படி 55 ஆயிரம் கன அடியாக குறைந்துள்ளது.

நீர்வரத்து குறைந்த போதிலும் மெயின் அருவி, சினிப்பால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது. காவிரி ஆற்றில் நீர்வரத்து தொடர்ந்து 50 ஆயிரம் கனஅடிக்கு மேல் அதிக அளவில் வருவதால் சுற்றுலா பயணிகள் நலன் கருதி அருவியில் குளிக்கவும் பரிசல் இயங்கவும் விதிக்கப்பட்ட தடையானது 22வது நாளாக தொடர்ந்து நீடிக்கிறது.

காவிரி ஆற்றில் வரும் நீர் வரத்தை தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர் வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறப்பு: 50 ஆயிரம் கனஅடியாக குறைப்பு



சேலம், ஆக. 7

கர்நாடகாவில் பெய்த மழையின் காரணமாக அங்குள்ள கிருஷ்ண ராஜ சாகர், கபினி அணைகள் நிரம்பியது. இதையடுத்து உபரிநீர் தமிழக காவிரி ஆற்றில் திறக்கப்பட்டது. இதன் காரணமாக நீர்வரத்து அதிகரித்து மேட்டூர் அணை கடந்த 30ந் தேதி மாலை 6 மணி அளவில் 120 அடியை எட்டியது. இதையடுத்து அணைக்கு வரும் உபரிநீர் அப்படியே காவிரி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று 7வது நாளாக 120 அடியில் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் கர்நாடகாவில் மழை பொழிவு குறைந்ததால் நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது. கிருஷ்ண ராஜசாகர் அணைக்கு இன்று வினாடிக்கு 34 ஆயிரத்து 29 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.

அணையில் இருந்து வினாடிக்கு 33 ஆயிரத்து 454 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 123.14 அடியாக இருந்தது. இதே போல் கபினி அணைக்கு வினாடிக்கு 12 ஆயிரத்து 225 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரத்து 542 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 82.35 அடியாக இருந்தது. இந்த 2 அணைகளில் இருந்தும் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 36 ஆயிரத்து 996 கன அடியாக குறைக்கப்பட்டது.

இதன் காரணமாக மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து குறைந்து வருகிறது. இன்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 73 ஆயிரத்து 330 கனஅடியாக நீர்வரத்து இருந்தது.

இதையடுத்து உபரிநீர் வினாடிக்கு 70 ஆயிரம் வீதம் திறக்கப்பட்டது. பின்னர் காலை 9 மணியளவில் உபரிநீர் திறப்பு வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகிறது.

# திருவையாறு ஐயாறப்பர் கோவிலில் அப்பர் கயிலை காட்சி திருவிழா




தஞ்சாவூர், ஆக. 7

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் உள்ள பிரசித்தி பெற்ற ஐயாறப்பர் கோவிலில் ஆண்டுதோறும் ஆடி அமாவாசையன்று அப்பர் கயிலை காட்சி நடைபெறுவது வழக்கம்.

அதாவது அப்பருக்கு சிவபெருமான் கயிலை காட்சி அளித்ததை நினைவு கூறும் வகையில் இந்த திருவிழா நடத்தப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான கயிலை காட்சி நேற்று இரவு ஆடி அமாவாசையையொட்டி நடந்தது. இதை முன்னிட்டு நேற்று மதியம் கோவிலில் இருந்து பஞ்சமூர்த்திகள் புறப்பட்டு திருவையாறு காவிரி ஆற்றில் தீர்த்தவாரி நடந்தது.

தொடர்ந்து, இரவில் ஐயாறப்பர் கோவிலில் உள்ள அப்பர் சன்னதியில் அப்பருக்கு சிவபெருமான் காட்சி கொடுக்கும் ஆடி அமாவாசை அப்பர் கயிலை காட்சி விழா நடைபெற்றது.

இதற்காக ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகி அம்மனுடன் வெள்ளி ரிஷப வாகனத்தில் எழுந்தருளி அப்பருக்கு காட்சி கொடுத்தார். அப்போது திடீரென கனமழை பெய்தது.

இருந்தாலும் கொட்டு மழையையும் பக்தர்கள் பொருட்படுத்தாமல் பக்தி கோஷங்கள் எழுப்பி சாமி தரிசனம் செய்து தேவார பாடல்களை பாடி உற்சாகமடைந்தனர். கொட்டும் மழையிலும் குடைப்பிடித்தபடி தீபாராதனை காண்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரியார் சுவாமிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை தருமபுரம் ஆதீன மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் ஆலோசனைபடி கோவில் நிர்வாகிகள், பணியாளர்கள் செய்திருந்தனர்.

# பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 94.93 அடியாக அதிகரிப்பு



ஈரோடு, ஆக. 7

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர்அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானி சாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக நீலகிரி மலைப்பகுதியில் கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டமும்உயர்ந்துவருகிறது. இதேபோல் பில்லூர் அணையிலிருந்தும் உபரி நீர் பவானி ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும் அணையில் இருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் நீரை விடஅணைக்குநீர்வரத்து தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதாலும் பவானிசாகர்அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இதனால் பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இன்று காலை பவானிசாகர் அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 126 கன அடி வீதம் தண்ணீர்வந்து கொண்டிருக்கிறது. இன்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணை நீர்மட்டம் 94.93 அடியாக அதிகரித்து உள்ளது. குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடியும், கீழ்பவானி வாய்க்காலுக்கு 5 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. மேலும் தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 800 கன அடியும், காலிங்கராயன் பாசனத்திற்கு 150கனஅடியும்எனமொத்தம் 1,055 கன அடி வீதம் தண்ணீர் திறக்க ப்பட்டு வருகிறது. இதே போல் 41 அடி கொள்ளளவு கொண்ட குண்டேரிபள்ளம் அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 39.03 அடியாக உள்ளது. இதே போல் 33 அடி கொள்ளளவு கொண்ட வரட்டு பள்ளம் அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 25.07 அடியாக உயர்ந்து உள்ளது. ஈரோடு மாவட்ட முக்கிய அணைகளின் நீர்ம ட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# திருச்செந்தூரில் 2வது நாளாக உள்வாங்கிய கடல்




தூத்துக்குடி, ஆக. 7

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் உள்ள பிரசித்தி பெற்ற முருகன் கோவிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். பல்வேறு மாவட்டங்களில் இருந்து திருச்செந்தூருக்கு வரும் பக்தர்கள் கடலில் புனித நீராடிவிட்டு முருகனை தரிசனம் செய்கின்றனர். ஆடி அமாவாசையை யொட்டி, கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

இந்த நிலையில் திருச்செந்தூரில் இன்று 2வது நாளாக 50 அடி தூரத்திற்கு கடல் உள்வாங்கியது. இதனால் கடலில் உள்ள பாறைகள் வெளியே தெரியத் தொடங்கின. அவற்றின் மீது நின்று பக்தர்கள் புகைப்படங்களை எடுத்துச் சென்றனர். அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் திருச்செந்தூரில் கடல் உள்வாங்கிவிட்டு, பின்னர் இயல்பு நிலைக்கு திரும்பும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சேலம்: எடப்பாடி போலீஸ் நிலையத்தில் பெட்ரோல் குண்டு வீச்சு




சேலம், ஆக. 7

சேலம் மாவட்டம் எடப்பாடி பஸ் நிலையம் அருகே எடப்பாடி ஜலகண்டாபுரம் பிரதான சாலையில் எடப்பாடி போலீஸ்நிலையம் செயல்பட்டு வருகிறது. அந்த போலீஸ் நிலையத்தில் திடீரென அடுத்தடுத்து 2 பெட்ரோல் குண்டுகள் போலீஸ் நிலைய வளாகத்தில் விழுந்து வெடித்து சிதறியது.

இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் வெளியே வந்து பார்த்த போது அப்பொருள் வெடித்து தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. உடனடியாக பற்றி எறிந்த தீயினை அணைத்த போலீசார் வெளியே வந்து பார்த்தபோது அங்கு யாரும் இல்லாத நிலையில், மர்ம நபர்கள் சிலர் போலீஸ் நிலையத்திற்குள் பெட்ரோல் குண்டுகளை வீசி இருக்கலாம் என போலீசார் சந்தேகம் அடைந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த சேலம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அருண் கபிலன், சங்ககிரி டி.எஸ்.பி ராஜா உள்ளிட்ட போலீசார் எடப்பாடி போலீஸ் நிலையத்தில் முகாமிட்டு தீவிர விசாரணை மேற்கொண்டனர். அதிகாலை நேரத்தில் மர்ம நபர்கள் எடப்பாடி போலீஸ்நிலையத்திற்குள் பெட்ரோல் குண்டு வீசிய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமரா பதிவுகளை ஆய்வு செய்த போலீசார் போலீஸ் நிலையத்திற்குள் பெட்ரோல்குண்டு வீசிய நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். அண்மையில் குற்ற செயல்களில் ஈடுபட்ட சிலர் மீது எடப்பாடி போலீஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருந்த நிலையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யாரேனும் இதுபோன்ற குற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம்? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் எடப்பாடி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நீச்சல் குளத்தில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு



சென்னை, ஆக. 7

சென்னையின் புழல் அருகே உள்ள விநாயகபுரம் பகுதியை சேர்ந்த ரத்தினகுமார் ராணி தம்பிதியின் மகன் கீர்த்தி சபரீஸ்கர். 10 வயதான இவர் சிறப்பு குழந்தையாவார்.

இந்த சிறுவன் கொளத்தூரில் நீச்சல் பயிற்சி பெற்று வந்தார். வழக்கம்போல் நீச்சல் குளத்திற்கு பயிற்சிக்கு சென்ற பள்ளி சிறுவன் கீர்த்தி நீரில் மூழ்கி பலியானார்.

சிறுவன் உயிரிழந்ததை யடுத்து பெற்றோர் போலீசில் புகார் அளித்தனர். பெற்றோரின் புகாரை அடுத்து நீச்சல் குளத்தின் உரிமையாளர் காட்வின், பயிற்சியாளர் அபிலாஷ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறையானபயிற்சி அளிக்காமல் பயிற்சியாளர்கள்வேடிக்கை பார்த்து கொண்டிருந்ததால் சிறுவன் பலியானதாக தகவல் வெளியாகி உள்ளது.

பலியான சிறுவன் உடலை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அனிருத் இசையில் தேவரா படத்தின் 2வது பாடல் வெளியானது




நடிகர் ஜூனியர் என்.டி.ஆர் '' இயக்குநர் கொரட்டலா சிவா இயக்கத்தில் 'தேவரா பாகம் 1 படத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தில்பாலிவுட்நடிகைஜான்விகபூர்நாயகியாக நடித்து வருகிறார். இதன்மூலம் அவர் தென்னிந்திய சினிமாவில் நடிகையாக கால் பதிக்கிறார்.

இப்படத்தில்பிரகாஷ்ராஜ்,சயிப்அலிகான்முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படம் பேன் இந்தியன் திரைப்படமாக உருவாகி வருகிறது. படத்தின் முதல் பாடலான ஃபியர் சாங் சமீபத்தில் வெளியாகி மக்கள் வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் இப்படத்தில் இரண்டாவது பாடலான 'சுத்தமல்லி' இன்று வெளியாகியுள்ளது. இப்பாடலை காவலா பாடலை பாடிய சில்பா ராவ் பாடியுள்ளார்.

இப்படம் வருகிற செப்டம்பர் 27 ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

## ராயன் படத்தின் 'வாட்டர் பாக்கெட்' வீடியோ பாடல் வெளியானது




நடிகர்தனுஷ்அவரது 50வது திரைப்படமானராயன் திரைப்படத்தை அவரே இயக்கி அதில் நடித்து இருந்தார். திரைப்படம் கடந்த வாரம் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

தனுஷுடன்துஷாரா விஜயன், காளிதாஸ் ஜெயராம், சந்தீப் கிஷன், எஸ்.ஜே சூர்யா, செல்வராகவன், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தில் தனுஷுக்கு தங்கையாக நடித்து இருந்தார் துஷாரா விஜயன்.

2024 ஆம் ஆண்டு வெளியான தமிழ் திரைப்படங்களில் ராயன் தான் வசூலில் முதல் இடம் பெற்றுள்ளது. ராயன் திரைப்படம் இதுவரை 116 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. தனுஷ் நடித்த படங்களிலே ராயன் தான் அதிகம் வசூலித்த படமாகும். இந்நிலையில் ரசிகர்களை வெகுவாக கவர்ந்த வாட்டர் பாக்கெட் வீடியோ பாடலை ராயன் படக்குழு வெளியிட்டுள்ளது.

## ஜெயம் ரவியின் மிருதன் 2 படத்தை குறித்து வெளியான அப்டேட்




2016 ஆம் ஆண்டு ஜெயம் ரவி நடிப்பில் சக்தி சௌதர் ராஜன் இயக்கத்தில் வெளியாகியது மிருதன் திரைப்படம் . இப்படத்தில் ஜெயம் ரவியுடன் லட்சுமி மேனன் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார்.

இப்படம் சாம்பி அபோகாலிப்ஸ் கதைக்களத்தில் உருவாகிய முதல் திரைப்படமாகும், ஊரில் ஒரு விஷ திரவம் பரவியதால் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் சாம்பிகளாக மாற தொடங்குகின்றனர். படத்தின் இறுதியில் கதாநாயகனான ஜெயம் ரவியும்அந்ததிரவத்தினால்பாதிக்கப்பட்டுசாம்பியாகமாறிடுவார்.

இவ்வாறு படத்தின் கதைக்களம் அமைந்து இருக்கும்.

இப்படத்தின்அடுத்த பாகம் எடுக்கபோவதாக 2016 ஆம் ஆண்டு தெரிவித்து இருந்தாலும். இப்பொழுது தான் அதற்கான ப்ரி ப்ரொடக்ஷன் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். படப்பிடிப்பு பணிகள் 2025 ஆம் ஆண்டு தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. படத்தில் நடிக்கப் போகும் மற்ற நடிகர்களின் விவரம் விரைவில் அறிவிக்கப்படும் எதிர் பார்க்கப்படுகிறது.

சக்தி சௌந்தர் ராஜன் இயக்குனருடன் ஜெயம் ரவி இணையும் மூன்றாவது திரைப்படமாகும். ஜெயம் ரவி தற்பொழுது பிரதர், காதலிக்க நேரமில்லை, ஜீனி போன்ற படங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அந்தகன் பட விழா: சமுத்திரகனியை ஆபாச வார்த்தைகளால் திட்டிய வனிதா விஜய்குமார்



தியாகராஜன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் அந்தகன். படத்தில் கண் தெரியாத கதாபாத்திரத்தில் பிரசாந்த் நடித்திருக்கிறார்.

சிம்ரன், பிரியா ஆனந்த், மனோபாலா சமுத்திரகனி, ஊர்வசி யோகி பாபு ,வனிதா விஜயகுமார் உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர். ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்துவருகிற 9ந்தேதிபடம்திரைக்குவரஇருக்கிறது.

இதையொட்டி படத்தின் பாடல் மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று நடந்தது.

விழாவில் தியாகராஜன் ,பிரசாந்த், சமுத்திரகனி, சிம்ரன், வனிதா விஜயகுமார், பெசன்ட் ரவி, சதீஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் சமுத்திரகனி பேசியதாவது:

நான் தியாகராஜனின் தீவிர ரசிகன். நான் தியேட்டரில் ஆபரேட்டராக பணிபுரிந்து கொண்டிருந்த போதே மலையூர் மம்பட்டியான் படத்தை போட்டு பார்த்து ரசித்திருக்கிறேன்.

அவர் மீது எனக்கு எப்போதும் ஒரு பயம் உண்டு. திடீரென நண்பர் ஒருவர் எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தியாகராஜன் உங்களிடம் பேச வேண்டுமாம் என்று கூறினார்.

ஏன் எதற்கு என்று கேட்பதற்குள் தியாகராஜனிடம் போனை கொடுத்து விட்டார். அவர் எடுத்ததும் நான் தியாகராஜன் பேசுகிறேன் சார் என்று கூறினார். அதைக் கேட்டதும் நான் உடனடியாக நேரில் வரட்டுமா என்றேன்.

பின்னர் விஷயத்தை கூறி படத்தில் நடிப்பதற்கு அழைத்தார். உடனடியாக சம்மதித்து படத்தில் நடித்தேன்.

அன்று முதல் பிரசாந்துடன் எனக்கு நல்ல நட்பு இருந்து வருகிறது. இருவரும் ஐயா என்று தான் அழைத்துக் கொள்வோம்.

படப்பிடிப்பில் ஒரு நாள் வனிதா விஜயகுமார் கெட்ட கெட்ட வார்த்தைகளால் என்னை சரமாரியாக திட்டினார். தாங்க முடியாமல் நான் தியாகராஜனிடம் வனிதா ஏன் என்னை இப்படி திட்டுகிறார்?என்று கூறினேன்.

அவர் சிரித்துக் கொண்டே பதில் அளிக்கையில், நான் காட்சிக்காக கொஞ்சம் அவரை திட்டு என்றேன். அவர் வாய்க்கு வந்தபடி கெட்ட வார்த்தைகளால் எப்படியெல்லாம் பேச வேண்டுமோ அப்படி எல்லாம் பேசி முடித்து விட்டார் என்று கூறினார்.

இவ்வாறு சமுத்திரக்கனி கூறியதும் தியாகராஜன் உள்பட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

இதையடுத்து மேடையில் அமர்ந்திருந்த வனிதா விஜயகுமாரிடம் சமுத்திரக்கனியை திட்டும்போது யாரை மனதில் வைத்துக் கொண்டு திட்டினீர்கள் என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் அளித்த பதிலில், என் அப்பாவை மனதில் நினைத்துக் கொண்டேன். உடனடியாக என் மனதில் தோன்றியவற்றையெல்லாம் திட்டி தீர்த்து விட்டேன். என் தந்தையும் அந்த அளவுக்கு நடிப்போடு ஒன்றிப் போய் விடுவார். அவர்தான் என் முன்மாதிரி என்று கூறினார்.

இந்த சம்பவத்தால் அந்தகன் பட விழா அரங்கமே சிரிப்பலையால் அதிர்ந்தது.

## பிலிம்ஃபேர் விருதுகளை குவித்த ரக்ஷித் ஷெட்டியின் `சப்த சாகரதாச்சே எல்லோ' திரைப்படம்




ஹேமந்த் ராவ் இயக்கத்தில் ரக்ஷித் ஷெட்டி நடிப்பில் கன்னட திரைப்படமான சப்த சாகரதாச்சே எல்லோ சைட் ஏ மற்றும் பி கடந்த ஆண்டு வெளியாகி மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றது.

படத்தில் ரக்ஷித் ஷெட்டியுடன் ருக்மணி வசந்த மற்றும் சைத்ரா நடித்து இருந்தனர். கன்னடத்தில் முதல் பாகம் நல்ல வரவேற்பை பெற்றதால் படத்தின் இரண்டாம் பாகத்தை தமிழ், தெலுங்கு மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியிட்டனர், தமிழில் ஏழு கடல் தாண்டி என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

காதலுக்காக ஒருவன் எந்தளவு தியாகம் செய்ய முடியும், காதலிக்காக தன் வாழ்க்கையை அற்பணிக்கும் நாயகனின் கதையாக இது அமைந்தது. திரைப்படம் தற்பொழுது அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் உள்ளது.

சமீபத்தில் நடந்த பிலில் ஃபேர் சவுத் விருதுகளில் இப்படம் 6 விருதுகளை வென்றது குறிப்பிடதக்கது.

சப்த சாகரதாச்சே எல்லோ படம் வென்ற விருதுகள்

சிறந்த நடிகர் ரக்ஷித் ஷெட்டி, சிறந்த இயக்குனர் ஹேமந்த் ராவ், சிறந்த நடிகர் ருக்மணி வசந்த், சிறந்த பின்னணி பாடகர் கபில் கபிலன், சிறந்த பின்னணி பாடகி ஸ்ரீலட்சுமி பெல்மன்னு , சிறந்த இசையமைப்பாளர் சரண் ராஜ் .

## பாரீஸ் ஒலிம்பிக்: துப்பாக்கி சுடுதலில் நூலிழையில் வெண்கலத்தை தவறவிட்டது இந்திய ஜோடி



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இன்று நடந்த துப்பாக்கி சுடுதல் ஸ்கீட் கலப்பு அணிகள்பிரிவுதகுதிச்சுற்றில்இந்தியாவின்அனந்த்ஜீத் நருகா, மகேஸ்வரி சவுகான் ஜோடி போட்டியிட்டனர்.

இதில் இந்திய ஜோடி 14-6 புள்ளிகள் எடுத்து 4வது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்துக்கான போட்டிக்கு தகுதி பெற்றது

இந்நிலையில், வெண்கல பதக்கத்துக்கான போட்டியில் இந்திய ஜோடி, சீனாவை எதிர்கொண்டது. இதில் அனந்த்ஜீத் சிங் நருகா மகேஸ்வரி சவுகான் ஜோடி 43-44 என்ற புள்ளிகள் பெற்று நூலிழையில் பதக்கத்தை தவறவிட்டது.

## பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தம்: காலிறுதிக்கு தகுதி பெற்ற நிஷா



பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில்இன்று பெண்களுக்கானமல்யுத்த போட்டியில் 68 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவை சேர்ந்த நிஷா தஹியா மற்றும் உக்ரைன் வீராங்கனையான டெட்டியானா ரிஷ்கோ ஆகியோர் மோதின.

இந்த போட்டியில் முதல் பாதியில் இந்திய வீராங்கனை -14 என்ற கணக்கில் பின்தங்கி இருந்தார். இதனையடுத்து சிறப்பாக விளையாடிய நிஷா இறுதியில் 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

## ஒலிம்பிக் நிறைவு விழாவில் இந்திய தேசிய கொடியை ஏந்துகிறார் மனு பாக்கர்



ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்து வருகிறது.

இதில் 206 நாடுகளில் இருந்து 10,500க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா துப்பாக்கி சுடுதலில் இதுவரை 3 வெண்கலம் மட்டுமே வென்றுள்ளது.

தனிநபர் பிரிவில் மனு பாக்கர் மற்றும் ஸ்வப்னில் குசாலே தலா ஒரு வெண்கலமும், இரட்டையர் பிரிவில் மனு பாக்கர், சரப்ஜோத் சிங் ஒரு வெண்கலமும் வென்றுள்ளனர்.

இதற்கிடையே, ஒலிம்பிக் நிறைவு விழாவில் இந்திய அணிக்கு தலைமை தாங்கி தேசியக்கொடியை ஏந்திச்செல்ல விரும்புகிறீர்களா என கேட்டபோது, இது ஒரு வாழ்நாள் கவுரவமாகும். அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்தால்

அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பாரீசில் நடைபெறும் ஒலிம்பிக் நிறைவு விழாவில் இரட்டை ஒலிம்பிக் பதக்கம் வென்ற மனு பாக்கர் இந்தியாவின் தேசியக்கொடியை ஏந்திச் செல்கிறார் என தகவல்கள் வெளியாகின.

## பாரீஸ் ஒலிம்பிக்: பதக்கப் பட்டியல் ஒரு பார்வை




33வது ஒலிம்பிக் போட்டி கடந்த மாதம் 26ந்தேதி பாரீசில் கோலா கலமாக தொடங்கியது. மறுநாள் 27 ந்தேதி முதல் போட்டிகள் ஆரம்பமானது. போட்டி தொடங்கியதில் இருந்து நேற்று முன்தினம் வரை அமெரிக்க அணியால் பதக்கப்பட்டியலில் முதல் இடத்தை பிடிக்க இயலவில்லை.

இந்த நிலையில் நேற்றைய 9வது நாள் போட்டியில் சிறப்பாக செயல்பட்டு அமெரிக்கா பதக்கப் பட்டியலில் முதல் இடத்துக்கு முன்னேறியது. நேற்று ஒரே நாளில் அமெரிக்காவுக்கு 5 தங்கம் கிடைத்தது.

இதனால் முதல் இடத்தை பிடிக்க முடிந்தது. ஆனால் அந்த இடத்தை அமெரிக்காவால் தக்கவைத்து கொள்ள முடியவில்லை.

மீண்டும் சீனா முதல் இடம் பிடித்தது. சீனா இதுவரை 21 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் ஆக மொத்தம் 52 பதக்கத்துடன் முதல் இடத்தை பிடித்துள்ளது.

அமெரிக்கா 19 தங்கம், 27 வெள்ளி, 26 வெண்கலம் ஆக மொத்தம் 72 பதக்கத்துடன் 2வது இடத்தில் உள்ளது.

3, 4 இடங்கள் முறையே பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளது. 3 வெண்கல பதக்கத்துடன் இந்தியா 58வது இடத்தில் உள்ளது.

## பாரீஸ் ஒலிம்பிக்: வெண்கல பதக்கத்தை தவறவிட்ட லக்ஷயா சென்




பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா சார்பில் துப்பாக்கிச் சுடுதலில் தனிநபர் பிரிவில் மனு பாக்கர், ஸ்வப்னில் குசாலே ஆகியோர் வெண்கலம் வென்றனர். கலப்பு இரட்டையர் பிரிவில் மனு பாக்கர், சரப்ஜோத் சிங் ஜோடி வெண்கலம் வென்றது.

இந்நிலையில், பேட்மிண்டன் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்திய வீரர் லக்ஷயா சென், மலேசியாவின் லீ சி ஜியா உடன் மோதினார்.

இதில் லக்ஷயா சென் 2113 என முதல் செட்டை கைப்பற்றினார். இதற்கு பதிலடியாக மலேசியா வீரர் 2வது செட்டை 2116 என கைப்பற்றினார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3வது செட்டை 2111 என்ற கணக்கில் மலேசிய வீரர் வென்று வெண்கலப் பதக்கம்பெற்றார். இதன்மூலம்லக்ஷயாசென்தொடரில் இருந்து வெளியேறினார்.



**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**

**தாமே தமிய ருணல்**

**விளக்கம்:**

**பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்க்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.